ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை –அரசுப் பொருட்காட்சி – வேலூர் மாவட்டம், 2009 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரங்கம் அமைத்து பங்கு பெற்றதற்கான செலவுத் தொகை ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா3) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.52** **நாள்:18.6.2009.**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.65, தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை நாள் 18.3.2009.
2. வேலூர் மாவட்ட ஆட்டசித் தலைவர் கடித எண்.பஇ1/3349/09, நாள் 23.4.09.
3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் கடித எண்.23720/என்.இ.டி.எம்.1, நாள் 22.5.2009.

----

**ஆணை:**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு அதற்கான செலவுத் தொகை ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)க்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இத்தொகையினை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகள், துறை தலைவர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப்பெறுவதை எதிர்பார்த்து அனுமதித்து ஆணை வெளியிடுமாறு தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை கேட்டுக் கொண்டுள்ளது.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)த்தை 2009–ஆம் ஆண்டில் வேலூர் மாவட்ட அரசுப் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு ஒப்பளிப்பு செய்தும், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு விடுவித்தும் அரசு ஆணையிடுகின்றது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

“2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் I திட்டத்தில் சேராதது – AA ஊரக வளர்ச்சி இயக்ககம் 08– விளம்பரமும் பிரச்சாரமும் 02– பொருட்காட்சி (குதொகு2515–00–001–AA 0824)”

4. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.33412/ஊவ/09/, நாள் 16.6.2009 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.